**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 58/2022**

08.08.2025

**வா.சா.1. ஜானகிராமன், த/பெ. சிவலிங்கம் மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

இதற்கு முன்பு குறுக்கு விசாரணை மற்றும் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்த விவரங்கள் நினைவில் உள்ளதா என்றால் - நினைவில் உள்ளது. பிரதிவாதி பெயரில் உள்ள கணக்கில் தொகை வரவு வைக்கப்பட்டது என்பது தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - தாக்கல் செய்யவில்லை. தேவைப்பட்டால் தயாராக உள்ளதாக சாட்சி கூறுகிறார். கூட்டுறவு நகர வங்கியில் பிரதிவாதி ரூ.4,40,000/- காசோலை மூலம் பெற்று பணமாக்கிக்கொண்டார் என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. தேவைப்பட்டால் தயாராக உள்ளதாக சாட்சி கூறுகிறார். காசோலை எண். 000947 னை நான் பிரதிவாதிக்கு வழங்கினேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. 30.09.2021ம் தேதியன்று மாலை 06.00 மணி செய்தில் சன் நியூஸ் தொலைக்காட்சியில் பிரதிவாதியால் செய்தி ஒளிப்பரப்பட்டது என்று சொல்லியிருப்பது தொடர்பாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - சி.டி தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு சிடி தாக்கல் செய்யவில்லை என்றால் - சரியல்ல. மாவட்ட குற்றப்பிரிவில் என் மீது பிரதிவாதி புகார் செய்ததாகவும் அதன்பேரில் திருத்துறைப்பூண்டி காவல்துணை கண்காணிப்பாளர் முன்பு ஆஜராகி வாக்குமூலமும் ஆவணங்களும் ஒப்படைத்தேன் என்பது தொடர்பான ஆதாரங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. என் மீது விக்கிரபாண்டியம் காவல்நிலையத்தில் எனக்கு எதிராக இதே பிரதிவாதி கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற எண். 50/2022 என்று ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் - சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கை என்னிடம் காட்டப்படுவதுதான். **அது பி.வா.சா.ஆ.1 ஆகும்**. அந்த முதல் தகவல் அறிக்கை தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் நான் முன்பிணை தாக்கல் செய்து பிணையில் சென்றேன் என்றால் - சரிதான். 30.09.2021ம் தேதியன்று சன் நியூஸ் தொலைக்காட்சியில் செய்தி வந்தது தொடர்பாக பிரதிவாதி மீது ஏதேனும் புகார் காவல்துறையில் அளித்தேனா என்றால் - இல்லை. செய்தி ஒளிப்பரப்பிய சன் நியூஸ் தொலைக்காட்சி மீது ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் - இல்லை. மன்னார்குடி கூட்டுறவு ஹர்பன் வங்கியில் என் பெயரில் ஒரு கணக்கு உள்ளதா என்றால் - என் பெயரில் இல்லை. தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி பெயரில் உள்ளது. ஆணையுறுதி ஆவணத்தில், நான் தான் மன்னார்குடி

கூட்டுறவு ஹர்பன் வங்கியில் கணக்கு வைத்துள்ளதாக காணப்படுகிறது என்றால் - சரிதான். மன்னார்குடி கூட்டுறவு ஹர்பன் வங்கியில் உள்ள நடப்பு கணக்கிலிருந்து பிரதிவாதிக்கு ரூ.4,40,000/- பட்டுவாடா எதுவும் செய்யப்படவில்லை என்றும் நான் கொடுத்த கடிதத்தின்படி அந்த தொகை அதே தேதியில் மன்னார்குடி கூட்டுறவு ஹர்பன் வங்கியிலிலிருந்து கூத்தாநல்லூர் மத்திய கூட்டுறவு வங்கிக்கு மாற்றம் செய்யப்பட்டதாக பிரதிவாதி கூறுகிறார் என்றால் - அது தவறாகும். நான் கூட்டுறவு சங்க செயலாளராக எத்தனை ஆண்டு காலம் பணி செய்தேன் என்றால் - 1990 லிருந்து கடந்த 35 ஆண்டுகளாக கூட்டுறவு துறையில் பணியாற்றி வருகிறேன். கூட்டுறவு பட்ட படிப்பு படித்துள்ளேனா என்றால் - படித்துள்ளேன். அந்த படிப்பில் கூட்டுறவு துறை சட்டங்கள் என்று தனிப்பாட பிரிவு உண்டு என்றால் - சரிதான். அதனால் எனக்கு கூட்டுறவு சட்டங்கள் அனைத்தும் நன்கு தெரியும் என்றால் - சரிதான். நான் வேலை செய்யும் சங்கத்தில் முறைகேடு நடைப்பெற்றால்., பிரிவு 81ன் கீழ் விசாரணை மேற்கொள்ளப்படும் என்றால் - சரிதான். சட்ட நுணுங்கள் நன்கு தெரிந்திருந்ததால் பிரிவு 81ன் கீழான விசாரணையில் ஆட்பட்டுவிடக்கூடாது என்பதற்காக விக்கிரபாண்டியம் கூட்டுறவு வங்கியிலிருந்த வைப்பீட்டு தொகையை காரண காரியம் இல்லாமல் மன்னார்குடி நகர கூட்டுறவு வங்கிக்கு மாற்றம் செய்து அதே தேதியில் எனக்கே தெரிந்த காரணங்களை கொண்டு கூத்தாநல்லூர் மத்திய கூட்டுறவு வங்கி கிளைக்கு மாற்றம் செய்துவிட்டேன் என்றால் - சரியல்ல. பிரதிவாதி, எங்களது தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க விவகார எல்லைக்குட்பட்ட கிராமத்தில் ஒன்றில் தான் குடியிருக்கிறார் என்றால் - சரிதான். பிரதிவாதிக்கு விவசாய நிலங்கள் உள்ளது என்றாலும் அதனடிப்படையில் எங்கள் கூட்டுறவு வங்கியில் அவருக்கு கணக்கு உள்ளது என்றால் - சரிதான். பிரதிவாதிக்கு கிடைக்கும் கூட்டுறவு சங்க கடன்கள் எங்களது வங்கியால் வழங்கப்படும் என்றாலும் அரசாங்கம் வழங்கும் விவசாயம் சம்மந்தப்பட்ட அரசு நிதிகள் எங்கள் கூட்டுறவு சங்க கணக்கில் வரவு வைக்கப்படும் என்றாலும் - சரிதான். பிரதிவாதி வங்கி கணக்கிலும் 2016 – 2017 ஆண்டிலிருந்து இன்றுவரை வரவு வைக்கப்பட்டு வருகிறது என்றால் - சரிதான். அந்த தொகையிலிருந்து பிரதிவாதி அவரது தேவைக்காக பணம் எடுக்க பிரதிவாதியுடன் குன்னியூர் ஊராட்சி மன்ற தலைவர் பூமிநாதனுடன் வந்தபோது, வெற்று தாளில் கையொப்பம் போட்டுக்கொடுத்துவிட்டு பணத்தை எடுங்கள் என்று நான் சொன்னதாக சொன்னால் - சரியல்ல. இது சம்மந்தமாகவும் பிரதிவாதி என் மீது கூட்டுறவு துறை அதிகாரிகளிடமும் மாவட்ட காவல் அதிகாரிகளிடமும் புகார் அளித்துள்ளார் என்றால் - சரியல்ல. பிரதிவாதி 2 முறை இதுபோல் புகார் அளித்துள்ளார் என்றால் - அது தவறாகும். பிரதிவாதி அவரது சங்க கணக்கில் உள்ள 2016-2017 முதல் இன்றுவரை வரவு செலவு கணக்குகளை தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெற்றுள்ளாரா என்றால் - ஆமாம். பெற்றுள்ளார். நானும்

பிரதிவாதியும் நீண்ட கால நண்பர்கள் என்றால் - இல்லை. பிரதிவாதி போட்டிருந்த நிரந்தர வைப்பு தொகையில் நான் முறைகேடு செய்ததால் என்மீது பிரதிவாதிக்கு வருத்தம் ஏற்பட்டது என்றால் - சரியல்ல. 2017 ம் ஆண்டிலிருந்து எங்களது கூட்டுறவு சங்கத்திற்கு பிரதிவாதி வரவில்லை என்றாலும் எந்தவிதமான கடன் பட்டுவாடாவும் அவர் பெறவில்லை என்றாலும் - சரியல்ல. பிரதிவாதி வங்கி கணக்கிலிருந்த தொகை அனைத்தையும் அவரை போலவே கையொப்பம் செய்து அவரது வங்கி கணக்கிலிருந்து நான் எடுத்துக்கொண்டேன் என்று சொல்வது - சுத்த பொய் ஆகும். எனது சம்பளம், படித்தொகை என்னவென்றால் - தற்போது மாதம் ரூ.50 ஆயிரம் வாங்குகிறேன். எனது ஆணையுறுதி ஆவணத்தில் செயலாளராக இருந்து செய்து பணிகளை தவிர ஆன்மீக காரியங்கள் செய்தும் சபரி மலைக்கு செல்லும் வசதியில்லாத அய்யப்ப பக்தர்களுக்கு வாகன வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தும் கோவில் கும்பபிசேகத்திற்கு நன்கொடை கொடுத்தும் கஷ்டப்படும் பள்ளி மாணவர்களை படிக்க வைப்பது என்றும் கிராமப்பகுதியில் உள்ள பெண்களின் திருமணத்திற்கு எனது சொந்த செலவில் பல்வேறு உதவிகள் செய்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான். இதுபோன்ற காரியங்களை எனக்கு மாத வருமானத்தை கொண்டு செலவு செய்ய இயலாது என்றால் - சரியல்ல. பிரதிவாதி வங்கி கணக்கிலிருந்து பிரதிவாதியின் கையொப்பத்தினை மோசடியாக போட்டு எடுத்த பணத்தைக் கொண்டுதான் மேற்சொன்ன காரியங்களை செய்தேன் என்றால் - சரியல்ல. மேற்படி பிரதிவாதி என்னை மிரட்டி பல்வேறு இலட்சங்களை பறிப்பதற்காக தினம் தினம் மிரட்டி வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான். இது தொடர்பாக காவல்நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் - இல்லை. நான் சொல்லும் சங்கதி உண்மையில்லை என்பதால் தான் காவல்நிலையத்தில் அவ்வாறு எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் – சரியல்ல. பிரதிவாதி கொடுத்த பொய் என்று சொல்லி காவலர்கள் எச்சரித்து அனுப்பினார்கள் என்பதற்கு ஆதரவாக எந்த ஆவணத்தையாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. காவல்நிலையத்தில் வாய்மொழியாக சொன்னார்கள். இது இந்த வழக்கிற்காக சொல்லப்பட்ட பொய்யான சங்கதி என்றால் - சரியல்ல. என்னை காவல்துறையினர் விசாரித்தபோது, என் மீது குற்றம் இல்லை என்பதற்கு ஆதரவாக காவல்துறையினர் ஏதேனும் ஆவணங்கள் கொடுத்துள்ளார்களா என்றால் - என்மீது பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கு எண். 50/2022 னை என் மீது குற்றம் இல்லை என்று கூறி பொருண்மை தவறு என்று தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதற்கான ஆதாரம் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. தற்போதுதான் தள்ளுபடி செய்துள்ளார்கள். ஆதனால், தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். வா.சா.ஆ.7 ஆன ஆவணத்தில் குமார் என்பவர் விக்கிரபாண்டியம் காவல் ஆய்வாளருக்கு எழுதிய கடிதம் என்றால் - சரிதான். குமார் என்பவர் விக்கிரபாண்டியம் தொடக்க கூட்டுறவு

வேளாண்மை சங்கத்தின் தலைவர் ஆவார். தலைவர் என்பவர் தொடக்க வேளாண்மை சங்கத்தில் 5 ஆண்டுகள் பணியிலிருப்பார். எப்போது தேர்வு செய்யப்பட்டார் என்று நினைவில் இல்லை. வா.சா.ஆ.7 ஆனது 11.05.2022 தேதிக்குரியது என்றால் - சரிதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் - சரிதான். வா.சா.ஆ.7 ல் 2 ம் பக்கத்தில் சங்க செயலாளர் திரு. ஜானகிராமன் என்பவரது நண்பர் பிரதிவாதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். நண்பர்களுக்கிடையில் ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். 2022 ம் ஆண்டு அனுப்பப்பட்ட அந்த கடிதத்திற்கு பிறகு அதனை மறுத்தோ அல்லது திருத்தம் செய்தோ நான் எந்த பதிலும் அனுப்பவில்லை என்றால் - சரிதான். வா.சா.ஆ.7 ல் 3 ம் பக்கத்தில் வரிசை எண்.6 ல் சங்க செயலாளர் மீது வழக்கு தொடர்வார் என தெரிந்து மன்னார்குடி வழக்கறிஞர் மூலம் 25.04.2022 ம் தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும் அந்த அறிவிப்பிற்கு சங்கத்தின் சார்பாக மறுப்பு அறிவிப்பு அனுப்பியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். மேற்படி 25.04.2022 மற்றும் அந்த அறிவிப்பிற்கு வழங்கப்பட்ட 02.05.2022 ம் தேதிகளில் அறிவிப்பினையும் இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். நான் சொல்வதுபோன்று மேற்சொன்ன 2 அறிவிப்புகளும் அனுப்பப்படவும் இல்லை பெறபடவும் இல்லை என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரியல்ல. கூட்டுறவு சங்க தேர்தல்கள் இல்லாத காலத்தில் சங்கத்திற்கு தனி அலுவலர்களாலும் கூட்டுறவு சங்க தேர்தல்கள் நடைப்பெற்றபிறகு நிர்வாக குழு நிர்வாகத்தினராலும் நடத்தப்படும் என்றால் - சரிதான். நிர்வாக குழு தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு சங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளும் நிர்வாக குழு நிர்வாகத்தினரால் நிர்வகிக்கப்படும் என்றால் - சரிதான். சங்கத்தின் அன்றாட பணிகளுக்காக நிர்வாக குழு தலைவரிடம் ஒப்புதல் பெற்று நடத்தப்படும் என்றால் - சரிதான். நானும் நிர்வாக குழு அமைப்பினரும் ஒன்றிணைந்தவர்கள் என்பதால் எனக்கு ஆதரவாக நிர்வாக குழுவினை தூண்டிவிட்டு செயல்பட வைத்துள்ளேன் என்றால் - சரியல்ல. பிரதிவாதியின் வங்கி கணக்கில், நான் கையாடல் செய்ததாக சொல்லி என் மீது இன்றுவரை விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் - சரியல்ல. எனது பணி ஓய்வு எப்போது என்றால் - 2027 ம் ஆண்டு. நான் விருப்ப ஓய்விற்கு விண்ணப்பித்துள்ளதாக சொல்வது - தவறானது ஆகும். நான், எனக்கே தெரிந்த காரணங்களை கொண்டு பிரதிவாதியின் கணக்கில் உள்ள தொகைகளை கையாடல் செய்துவிட்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக

பிரதிவாதியின் மீது வேண்டுமென்றே ஒரு பொய்யான அவதூறு வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் என்னுடைய வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கது அல்ல என்றாலும் பிரதிவாதியின் செலவு தொகையுடன் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் - சரியல்ல.

MUTHURAMAN

Digitally signed by MUTHURAMAN
DN: cn=MUTHURAMAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.11 16:53:21 +0530

சார்வு நீதிபதி,

மன்னார்குடி.